கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 03.11.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒற்றுமைப் பேரணி மற்றும் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்தநாள் விழா

தமிழ்நாடு வேளான்மைப் பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் "இரும்பு மனிதர்" எனப் போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150–வது பிறந்தநாளை முன்னிட்டு 31.10.2025 பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. இந்த விழாவை முன்னிட்டு, பல்கலைக்கழகத்தின் 4 (த.நா.) மற்றும் 5 (த.நா.) (பெண்கள்) தேசிய மாணவர் படை (NCC) அலகுகள் இணைந்து "ஒற்றுமைப் பேரணியை" பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்ச்சியில் மாணவர் நல மைய முதன்மையர் முனைவர். ஜெ. இராமலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு நடைபயணப் பேரணியை கொடியசைத்து விழாவைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

நடைபயணத்தில் தேசிய மாணவர் படை மாணவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பை வலியுறுத்தும் விதமாக இந்த பேரணி நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக, மாணவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் இணைந்து "தேசிய ஒற்றுமை உறுதிமொழி" எடுத்தனர். இதன் மூலம் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஒத்துழைப்பை நிலைநிறுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மறுபடியும் வலியுறுத்தினர்.

இதையொட்டி, தேசிய சேவை திட்டம் (NSS) சார்பாகவும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாணவர்கள் இடையே ஒற்றுமை உணர்வை ஊக்குவிக்கும் வகையில் கட்டுரை எழுதுதல், போஸ்டர் வரைதல், சுத்தம் செய்வது (Cleanliness Drive), வினாடி வினா போட்டிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டது

இந்நிகழ்ச்சி தேசப்பற்று மற்றும் ஒற்றுமையின் உணர்வை வலியுறுத்தும் வகையில் நிறைவுற்றது. சர்தார் வல்லபாய் பட்டேல் வலியுறுத்திய "ஒற்றுமையிலே வலிமை" என்ற செய்தி அனைவரின் மனங்களிலும் எதிரொலித்தது.

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், உயிரித்தொழில்நுட்பம், வேளாண் வணிக மேலாண்மை மற்றும் உயிர் தகவலியல் போன்ற பல துறைகளில் பயிலும் மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். மொத்தம் 1,500–க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேசிய ஒற்றுமை உறுதிமொழி எடுத்தனர்.

நிகழ்ச்சிகள் அனைத்தும் தேசிய திட்ட ஒருங்கிபிணைப்பாளர் முனைவர் பி.வெற்றிவேல் காளை மற்றும் தேசிய திட்ட அலுவலர்கள் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயல் படுத்த பட்டது. இந்த விழாவை தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் த.வித்யா மற்றும் முனைவர் ச.தம்பிதுரை ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**